பதிவு எண். ம். 6311 ★ தொலைபேசி: 51331 ★ சிறப்பு: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.,எம்.பி.

மலர்: 19] சென்னை: கார்த்திகை 6 (22—11—71) திங்கள் வெளியூர்: கார்த்திகை 7 (23—11—71) செவ்வாய் [இதழ்: 133

சமதர்மம் நமது பிறப்புரிமை

அழிவுச் சக்திகட்குத் தடுப்புச் சுவராக முற்போக்குச் சக்திகள்

எடுத்துக்கொள்ளுமுன் கொடுத்து விடுங்கள் -- இல்லையேல் அழிவுச் சக்திகள் உருவாகும்

பிற்போக்குவாதிகளுக்குப் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். எச்சரிக்கை

சென்னை, நவ. 22—

" சமதர்மம் – சமத்துவம் என்பதெல்லாம் எங்கிருந்தோ வருவதல்ல -- நம்மோடு பிறந்த பிறப்புரிமை அது !

" நாமே நமது நலன்களைப் பிறருடன் பங்கிட்டுக்கொள்ள முன்வர வேண்டும் ; அப்படி மனமுவந்து கொடுக்க முன்வராவிட்டால், 'எடுத்துக் கொள்ளுவோம்' என்று கூறும் சூழ்நிலைதான் வரும ; அதையும் தாண்டினுல், இன்னும வேகமாகப்போய் அடித்துப் பறித்துக் கொள்ளும் நிலையும் வரலாம் !

" தலைமையமைச்சர் இந்திரா காந்தியின் இந்தியத் தேசியக் காங்கிரசும் -- திராவிட முன்னேற்றக் கழகமும் மற்றும் உள்ள முற்போக்குச் சக்திகளும், வசதியுள்ளவர்களைப் பார்த்து, 'கொடுத்து விடுங்கள்' எனச் சொல்கின்றன ; இந்த அறிவுரையைக் கேட்கவில்லையென்றுல், 'எடுத்துக கொண்டோம்' என்று சொல்கின்ற பரம்பரை உருவாகிவிடும் !

" உணர்ச்சிமிக்கவர்கள் தோன்றினுல், அழிவுச் சக்திகள் தான் தாண்டவமாடும் ! அழிவுச் சக்திகள தலையெடுக்காமல் சனநாயகத்தைக் காக்கும் தடுப்புச் சுவர்களாகத்தான் பேரறிஞர் அண்ணுவின் கொள்கைகளும் -- தலைமையமைச்சர் இந்திரா காந்தியின் கொள்கைகளும் அமைந்துள்ளன !

" தலைமையமைச்சர் இந்திரா போன்ற முற்போக்காளர்களின் கொள்கைகள் வெற்றி பெறவில்லையென்றுல் -- அவர்களின் திட்டம் சரிந்தது என்றுல், இந்தியாவில சனநாயகம் செத்துப் போய்விடும்.

" இத்தகைய ஆபத்தைத் தடுக்கின்ற வகையில்தான், தலைமையமைச்சர் இந்திராவின் முற்போக்கு நடவடிக்கைகளுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவளிதது வருகிறது "

என்று தி. மு. கழகப் பொருளாளர்—புரட்சிநடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள், தெள்ளத் தெளிவுற விளக்கிக் கூறினுர் ; சென்னை நகர இளைஞர் காங்கிரஸ் சார்பில் நடைபெற்ற நேரு—இந்திரா பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு பேசுகையில அவர் மேலும் கூறியதாவது :—

" தலைமையமைச்சர் இந்திராவின் பிறந்த நாள் உண்மையில் ஒரு தேசியத் திருவிழா ஆகும ; 'தேசியம்' என்பது 'நமது நாடு -- நம்முடைய மக்கள்' என்ற உணர்வுடன், 'நம்முடைய மக்கள் அனைவரும் சிறக்க வேண்டும்' என்ற மற்றும் பாசமும்கொண்டு உழைப்பதாகும்.

இந்தத் தத்துவத்தை எழுத்தில் வடிக்கலாம்--பேசலாம் ; ஆனுல் அதன் அடிப்படையான நோக்கம் என்ன என்பதைப் புரிந்து கொண்டு செயல்பட்ட ஒரு தத்துவத்தின் உருவமாகத் தலைமையமைச்சர் இந்திரா இன்று விளங்குகிருர்.

இதே தலைமையமைச்சர் இந்திரா அவர்களைக் கடந்த தேர்லின்போது பெரிய தலைவர்கள் சிலர், தரக்குறைவாகத் தாக்கினுர்கள்.

'லால்பகதூர் சாஸ்திரிக்குப் பிறகு, 'இந்த நாட்டை ஆள்வதற்கு யார் தகுதியுள்ளவர்' என்று பார்த்து மக்கள் அவரைத் தேர்ந்தெடுத்தார்கள் ; அதனைக் கண்ட பின்னரும் கடுமையான சொற்களில் அவரைத் தாக்கினுர்கள்.

ஒரு பெண் ஆள்வதா' என்று கேட்டார்கள் ; 'நம்மைப் பெற்றெடுத்த தாயாக ஒரு பெண் இருக்கும்போது, தாய்க் குலத்தைச் சார்ந்த ஒரு தாய் இந்த நாட்டை ஆளக்கூடாதா' என்று தேர்தல் பிரச்சாரத்தின் போது நான் கேட்டேன் ; இன்றுவரை அதற்கு யாரும் பதில் அளிக்கவில்லை.

கட்டுப்பாட்டை மீறினுர்' என்று குற்றஞ்சாட்டினுர்கள்.

கட்டுப்பாடு என்பது என்ன ? -- நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ளவதுதான் !

தேசிய உணர்வை இழந்து -- பண்பை இழந்து செயல்பட்டால் அது எப்படிக் கட்டுப்பாடு ஆக முடியும் ?

'இந்திரா காந்திதான் இந்த நாட்டை ஆளத தகுதி படைத்தவர்' என்று நேற்று சொன்ன பெரியவரே இன்று அவரைக் குற்றம் கூறினுல், 'பெரிய தலைவர் இப்படி நாக்குப் பிறழ்ந்து பேசலாமா' என்றுதான் மக்கள் கேட்பார்கள்.

கிழக்கு வங்கப் பிரச்சினை எழுந்தவுடன், 'வங்க தேசத்தை உடனே அங்கீகரிக்க வேண்டும்' என்று பலரும் கூறினுர்கள் ; ஆனுல் தலைமையமைச்சர் இநதிரா அவசரப்படவில்லை.

உலக நாடுகளின் தலைவர்களையெல்லாம் அவர் சந்தித்தார் ; 'கிழங்கு வங்கப் பிரச்சினை இந்தியாவின பிரச்சினை அல்ல; அதனைத் தீர்மானிக்கும் பொறுப்பு கிழக்கு வங்க மக்களுக்கே உரியது' என்று அவர் உறுதியாகக் கூறினுர் ; இதன் மூலம், அவருடைய இராசதந்திரம் தெரியவரும்.

இப்படிப்பட்ட ஒரு வீராங்கனையைப் பெற்றெடுத்துக் கொடுத்தமைக்காக நாம் நேருவுக்கு நன்றி செலுத்த வேண்டும்."

கல்லூரி மாணவர்களின் காட்டுமிராண்டிச் செயல்

கேரள முதலமைச்சர் கடும் எச்சரிக்கை

திருவனந்தபுரம், நவ. 22—

" **கல்லூரிகளில் 'ராகிங்'கில் (புதிதாகச் சேரும் மாணவர்களைப் பழைய மாணவர்கள் கிண்டல் செய்வது -- துன்புறுத்துவது) ஈடுபடுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் "**

என்று கேரள முதலமைச்சர் அச்சுத மேனன் எச்சரித்தார் ; அவர் மேலும் கூறியதாவது :—

" **இந்த ஆபாசமான காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையில் ஈடுபடும் மாணவர்களைச் சமூக பகிஷ்காரம் செய்யவேண்டும்."**

இராஜஸ்தானில் சிலைத் திருட்டு

ஜெய்ப்பூர், நவ. 22—

இராஜஸ்தான் மாநில பாலி மாவட்ட ஜைனக் கோயில் ஒன்றிலிருந்து 16 உலோகங்களாலான சிலைகள் திருட்டுப் போயிருக்கின்றன. திருடர்கள் கதவை உடைத்து, தங்கம் -- வெள்ளி நகைகளையும் எடுத்துச் சென்றிருக்கின்றனர்.

இந்த மாவட்டத்தில் சிலைகள் திருட்டுப் போவது இது நான்காவது தடவையாகும்.

இந்தியாவுக்கு பிரிட்டன் கடன்

புதுடில்லி, நவ. 22—

3.50 கோடி பவுன் தொகைக்கான (ரூ. 63 கோடி) இரு கடன்களை பிரிட்டன் இந்தியாவுக்கு அளித்தது.

1971—72-ம் ஆண்டில் இந்தியாவுக்கு பிரிட்டன் தரும் உதவியின் ஒரு பகுதியாக இது இருக்கும்.

ஏற்கனவே உள்ள கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு உதவும் வகையில் 75 இலட்சம் பவுன் (ரூ. 13.50 கோடி) தொகைக்கான ஒரு கடன ஒப்பந்தம் முன்பே கையெழுத்தாகியிருக்கிறது.

1971—72-ம் ஆண்டில் இந்தியாவுக்கு மொத்தம் 5,45 கோடி பவுன் (ரூ. 98.10 கோடி) தொகைகளைக் கடன்களாகத் தருவதாகப் பிரிட்டன் உறுதி கூறியிருக்கிறது.

பாகிஸ்தானுக்குப் பதிலடி

திடீர்த் தாக்குதல் முறியடிக்கப்பட்டது

ஜல்பைகுரி, நவ. 21—

மீண்டும் பீரங்கித் தாக்குதலில் ஈடுபட்ட பாகிஸ்தான் துருப்புக்கள் மீது இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினர் திருப்பிச் சுட்டதனுல், குறைந்தது 10 பாகிஸ்தான் இராணுவத்தினராவது இறந்திருக்கக்கூடும் என்று செய்திகள் தெரிவிககின்றன.

பாகிஸ்தான் துருப்புக்கள் நேற்றிரவு சுடத் தொடங்கியது -- இன்று பிற்பகல் வரையில் அது நீடித்திருந்ததாம்.

எல்லைக்கப்பால், இரு பட்டாலியன் துருப்புக்களைப் பாகிஸ்தான் நிறுத்தி வைத்திருபபதாகவும், எல்லையையொட்டி உள்ள எட்டு கிலோ மீட்டர் பகுதியிலிருந்து மக்களைக் காலி செய்துவருகிருர்கள் என்றும் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

காலி செய்யச் சொன்னதற்குப் பணியாத மக்களின் வீடுகளைப் பாகிஸ்தான் துருப்புக்கள் வெடி வைத்துத் தகர்த்து வருவதாகவும் செய்தி ஒன்று கூறுகிறது.

பாகிஸ்தானின் திடீர்த் தாக்குதல் காரணமாக இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த இருவர் உட்பட 8 பேர் கொல்லபபட்டதாகவும், இவர்களில் ஒருவர் இராணுவ மேஜர் ஆவார் என்றும் அதிகார வட்டாரத்தினர் தெரிவித்தனர்.

புளோரிடா பகுதியில் கலைஞர்

அறுவைச் சிகிச்சைக்குப்பின் சுற்றுப்பயணம்

டிச. 4-ம் நாள் தாயகம் திரும்பத் திட்டம்

வாஷிங்டன், நவ 22—

அமெரிக்காவின் பால்டிமோர் மருத்துவமனையில் கண் அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கடந்த சனியன்று அங்கிருநது வெளியேறி, மீண்டும் வாஷிங்டன் வழியாகப் புளோரிடாவுக்குச் சென்று தமது சுற்றுப்பயணத்தைத் துவங்கினுர்.

அங்கு சைப்ரஸ் பூங்கா, டிஸ்னி உலகம், கென்னடி முனை விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு ஆகியவற்றை அவர் பார்வையிடுகிருர்.

இடது கண்ணில் சிறிய கட்டுடன் காணப்படும் முதலமைச்சர், தமக்கு இபபோது வலி ஏதும் தெரியவில்லையெனக் கூறினுர்.

புளோரிடாவில் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு கீழ்க்கண்டவாறு மற்ற இடங்களில் அவர் சுற்றுப்பயணம் செய்வார் என்று தெரியவருகிறது :—

நவ. 22 முதல் 24 வரை : சிகாகோ.

நவ 25 : நயாகரா நீர் வீழ்ச்சிப் பகுதிக்கு வருகை.

நவ. 25 முதல் 29-வரை : நியூயார்க் வருகை -- தமிழ்ச் சங்கத்தில் பேருரை ; மற்றும் ஐ. நா. அவையைப் பார்வையிடல்.

அதன் பிறகு மீண்டும் கலைஞர் அவர்கள் வாஷிங்டனுக்கு வந்து சேருவார் ; அங்கிருந்து டிச. 4-ம் நாள் இலண்டன் வழியாகத் தாயகம் திரும்புகிருர்.

ஏற்கனவே அமெரிக்காவின் மேற்குக் கரையோரப் பகுதிகளுக்கும் -- ஏனைய பகுதிகளுக்கும் செல்லுவதற்கு முதலமைச்சர் திட்டமிட்டிருந்தார் ; கண் அறுவைச் செய்யப்பட்டிருப்பதால், கடுமையான சுற்றுப்பயணம் முதலமைச்சருக்குச் சிரமத்தை ஏற்படுத்தும் என்று கருதி இந்தப் பகுதிச் சுற்றுப்பயணத் திட்டங்கள் கைவிடப்பட்டன.

தேவைப்பட்டால் மீண்டும் பால்டிமோர் மருத்துவமனை டாக்டர்களுடன் உடல்நிலை குறித்துத் தொடர்பு கொள்ளவும் வசதி செய்து கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆயினும் இதற்கு அவசியம் இருக்காது என்று கருதுவதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

பொறுப்பற்ற குற்றச்சாட்டை சீனப்பிரதிநிதி கூறியதேன்?

பாகிஸ்தானின் நிர்ப்பந்தமே காரணம் என யூகம்

'ஆசிய-ஆப்பிரிக்க நாடுகட்குத் தவறான வழிகாட்டும் முயற்சி' எனக்கருத்து

திபெத்தியர்மீது கையாண்ட அடக்குமுறையை மறைக்கச் சீன முயற்சிப்பதன் எதிரொலி

நியூயார்க், நவ. 22—

கிழக்கு வங்காள அகதிகள் பிரச்சினையில், தன்னுடைய அனுதாபம் முழுவதும் பாகிஸ்தான் அரசிடம்தான் இருக்கிறது என்பதைக் கம்யூனிஸ்டுச் சீனா, ஐ. நா. குழுவில் சந்தேகத்திற்கு இடமின்றித் தெளிவாக்கியது.

'மூன்றாவது குழு' (ஐ.நா. பொதுச் சபையின் சமூக -- கலாச்சாரக் குழு) என்று அழைக்கப்படும் இந்தக் குழுவில், கிழக்கு வங்க அகதிகள் பற்றிய பிரச்சினை மீண்டும் விவாதிக்கப்பட்டது; முதல் தடவையாகச் செஞ்சீனப் பிரதிநிதிகளும் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

வங்க அகதிகள் பிரச்சினை பற்றி நெதர்லாந்து, நியூசிலாந்து, சுவீடன் ஆகிய நாடுகள் சேர்ந்து தாக்கல் செய்துள்ள ஒரு நகல் தீர்மானத்தின் மீது விவாதம் நடந்தது; விவாதம் முடிவடையும் நேரத்தில் சீனப் பிரதிநிதி திடீரென்று இந்தியாவைத் தாக்கிப் பேசினார்; 'இந்தியத் துணைக் கண்டத்தில் இப்போது நிலவும் நெருக்கடி நிலைமைக்கு முழுப் பொறுப்பும் இந்தியாவையே சேரும்' என்றார்; ஆனால், இந்தியாவின் பெயரை அவர் வெளியிடவில்லை; 'ஒரு நாடு' என்று மட்டுமே அவர் கூறினார்.

"கிழக்குப் பாகிஸ்தானில் எழுந்துள்ள பிரச்சினை முற்றிலும் பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரம்; அதைப் பாகிஸ்தான் மக்களேதான் தீர்த்துக்கொள்ள வேண்டும்; எக்காரணத்தை முன்னிட்டும், வேறு எந்த நாடும் அதில் தலையிட உரிமை இல்லை" என்றார்.

"பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களில் 'ஒரு நாடு' தலையிட்டதன் பலனாகத்தான் கிழக்கு வங்க அகதிகள் பிரச்சினை இவ்வளவு பெரிதாக வளர்ந்திருக்கிறது" என்று அவர் மேலும் கூறினார்.

"கிழக்கு வங்க அகதிகள் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு ஏற்பட வேண்டுமானால், முதலில் பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களில் மற்றவர்கள் தலையிடுவது நிற்கவேண்டும்" என்று சீனப் பிரதிநிதி குறிப்பிட்டுக் கூறினார்.

இந்தியா -- பாகிஸ்தான் தகராறு தொடங்கியதிலிருந்து இது வரையில் எந்த நாடும் இவ்வாறு கடுமையாகப் பேசியதில்லை.

"நெருக்கடி நிலைமையை தணிப்பதற்கு அண்மையில் பாகிஸ்தான் அரசு பல யோசனைகளைக் கூறியது; ஆனால், இந்த யோசனைகளையெல்லாம் சம்பந்தப்பட்ட அந்த நாடு நிராகரித்துவிட்டது; பிறருடைய உள்நாட்டு விவகாரங்களில் தலையிடும் இந்த வழக்கம் பற்றி சீன அரசுக்கு நன்றாகத் தெரியும்; ஏனெனில், திபேத் பிரச்சினையிலும் அவர்களும் இப்படித்தான் செய்தார்கள்" என்று சீனப் பிரதிநிதி கூறினார்.

"சீனப் பிரதிநிதி இவ்வாறு கடுமையாகப் பேசியிருப்பதைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை" என்று இந்தியத் தூதர் சமர் சென் கூறினார்.

"இது பீகிங்கின் வழக்கமான முறையே ஆகும்; அதையே இங்கும் திருப்பிச் சொல்லியிருக்கிறார்கள்" என்று அவர் நிருபர்களிடம் கூறினார்.

சீனப் பிரதிநிதி பேசுகிறார் என்ற செய்தி தெரிந்தவுடன் மண்டபம் நிறைந்துவிட்டது; பல உயர் தகுதியுள்ள தூதர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

சீனாவுடன் வர்த்தகத்தை மீண்டும் தொடங்க இந்தியா ஆவல் தெரிவித்த 2 நாட்களுக்குள் இவ்வாறு சீனா கருத்துத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

"பாகிஸ்தானுடைய கடும் நிர்ப்பந்தத்தின் காரணமாகச் சீனா மேற்கண்ட கருத்தைப் பகிரங்கமாக ஐ. நா. குழுவில் அறிவித்திருக்கலாம்" என்று அதிகார வட்டாரங்கள் கருதுகின்றன.

ஆனாலும், 'ஓராண்டுக்கும் மேலாக சர்வதேச உறவில் சீனா காண்பித்துவரும் நீக்குப்போக்கான தன்மையை இதனால் அது கைவிட்டதாகாது' என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

திபேத்திய அகதிகள் பிரச்சினையையும் -- கிழக்கு வங்க அகதிகள் பிரச்சினையையும் சீனா சமநிலைப்படுத்திக் கூறியிருப்பதுதான் இங்கு கவலை அளித்திருக்கிறது; இதுவரையில் வங்காள தேசப் பிரச்சினையில் திட்டவட்டமான கொள்கை எதையும் கடைப்பிடிக்காத சில ஆசிய -- ஆப்பிரிக்க நாடுகளுக்கு இந்த அறிவிப்புத் தவறான வழிகாட்டுவதாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

சீனப் பிரதிநிதியின் அறிக்கையில் வங்காள தேசத்தில் பாகிஸ்தான் எடுத்த இராணுவ நடவடிக்கைக்கு நேரடியான ஆதரவு தெரிவித்து எந்த வாசகமும் இல்லை; இதுதான் அதிகார வட்டாரங்களுக்குச் சிறிதளவு மனநிறைவை அளிக்கிறது.

சீனாவுடன் வர்த்தக உறவை ஏற்படுத்திக்கொள்ள இந்தியாவுக்குள்ள விருப்பத்தைப் பொறுத்தவரையில், இந்த அறிக்கை புதிய சிரமம் எதையும் தோற்றுவிக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை; காண்டன் வர்த்தகச் சந்தையில் பங்கு பெறுவது என்றும், இந்தியாவின் தொழில் சந்தையில் பங்கு கொள்ளும்படி சீனாவை அழைப்பதென்றும் புதுடில்லியில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

வர்த்தக உடன்படிக்கை தொடர்பான முன்னேற்டப் பேச்சுக்களை நடத்த ஒரு குழுவைப் பீகிங்குக்கு அனுப்புவது, மேற்கண்ட இந்தியாவின் அழைப்புக்குச் சீனா அளிக்கும் பதிலைப் பொறுத்தே இருக்கிறது.

சீனாவின் போக்கு இங்கு அரசியல் வட்டாரங்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்திருக்கிறது; என்றாலும், சீனாவுடன் உள்ள உறவை மேம்பாடு செய்துகொள்ள இந்தியா மேற்கொள்ளும் முயற்சிக்கு இது தடங்கலாக இருக்கும் என்று அரசியல் வட்டாரங்கள் கருதவில்லை.

ஐ. நா.-வில் உள்ள இந்தியப் பிரதிநிதி கூறியுள்ளதைப்போல, திடீரென்று பீகிங் தனது கருத்தை மாற்றிக்கொள்ள முடியாது என்பதை அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

மேலும், இதே குழுவில், திபேத்தியர்கள் மீது சீனா அடக்குமுறையைப் பிரயோகம் செய்தது பற்றிய பிரச்சினை விவாதத்துக்கு வர இருப்பதால், இப்போதிருந்தே தங்கள் தரப்பைப் பலப்படுத்திக் கொள்ளச் சீனா முயற்சி எடுத்து வருவதாகவும் கருதப்படுகிறது.

'எதிர்பார்த்த ஒன்றேயாகும்' என்கிறார் தலைமையமைச்சர் இந்திரா காந்தி

அகமதாபாத், நவ. 22—

"ஐ. நா.-வில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக சீனா பேசியிருப்பது நமக்கு வியப்பை ஏற்படுத்தவில்லை" என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

'இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றேயாகும்' என்று தெரிவித்த அவர், 'சீனாவின் இந்தப் போக்கு, நாம் சீனாவிடம் உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புவதைப் பாதிக்காது' என்றும் கூறினார்.

"ஆகவே, பாகிஸ்தானுக்கு ஆதரவானதோர் நிலையை ஐ. நா.-வில் சீனப் பிரதிநிதி எடுத்திருப்பது குறித்துப் பரபரப்பு அடையக் கூடாது" என்று அவர் மக்களைக் கேட்டுக் கொண்டார்.

சிக்கனச் சீரமைப்பு மூலம் ரூ. 59 கோடி

புதுடில்லி, நவ. 20—

"வங்க தேச அகதிகளால் ஏற்பட்டிருக்கும் சுமையைக் குறைக்க மத்திய அரசு மேற்கொண்டிருக்கும் சிக்கனச் சீரமைப்பு காரணமாக இந்த ஆண்டு ரூ 59 கோடி மிச்சப்படும் எனக் கருதப்படுகிறது"

என்று மக்களவையில், துணை நிதி அமைச்சர் கே. ஆர். கணேஷ் தெரிவித்தார்.

புளிச்சக்கீரைத் தண்டிலிருந்து காகிதம்

தமிழக அரசு ஆய்வு -அமைச்சர் அன்பில் தகவல்

திருச்சி, நவ. 22—

புளிச்சக்கீரைச் செடியின் தண்டை அறைத்துக் கூழாக்கிக் காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலைகளைத் தமிழ்நாட்டில் 10 இடங்களில் அமைக்கத் தமிழக அரசு ஆலோசித்து வருகிறது.

இந்தத் தகவலை, வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் வெளியிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"அண்மையில் நான் கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்றிருந்தபோது புளிச்சக்கீரைத் தண்டிலிருந்து தயாரிக்கப்பட்ட காகிதத்தைப் பார்வையிட்டேன்; அந்தக் காகிதம் நன்றாகவும் -- பலமுள்ளதாகவும் இருந்தது.

வெளிநாடுகளில், இப்படிப் புளிச்சக்கீரைத் தண்டை மூலப் பொருளாகக் கொண்டு காகிதம் தயாரிக்கப்படுவதாகக் கேள்விப்படுகிறோம்.

புளிச்சக்கீரைச் செடியைப் பயிரிடத் தண்ணீர் அதிகம் தேவைப்படாது; 5 மாதங்களில் வளர்ந்துவிடுகிறது; விவசாயிகளுக்கு வருமானமும் அதிகம் கிடைக்கும்.

ஆயிரம் ஏக்கரில் விளைகின்ற செடிகளின் தண்டு, ஒரு தொழிற்சாலை இயக்குவதற்குப் போதுமானதாகும்.

முதலமைச்சர் கலைஞர் வெளிநாட்டிலிருந்து திரும்பிய பிறகு, இது பற்றிய விவரங்கள் அறிவிக்கப்படும்."

மேயர் -- துணை மேயர் தேர்தல்

நவ. 29-ல் நடைபெறும்

சென்னை, நவ. 22—

சென்னை மாநகராட்சி மன்றத்தின் 1971—72-ம் ஆண்டுக்கான புதிய மேயரும், துணை மேயரும் 29-11-71 மாலை 4.45 மணிக்குக் கூடும் மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

சென்னை மாநகராட்சி மன்றம் கடைபிடித்துவரும் மரபுப்படி இந்த முறை பிராமண வகுப்பைச் சேர்ந்த ஒருவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

இதனையொட்டி, 26—11—71 மாலை 3.30 மணிக்கு, பிராமண வகுப்பைச் சேர்ந்த மாநகராட்சி உறுப்பினர்களின் கூட்டம் ஒன்று நடைபெறும்.

போட்டியிருந்தால், 29—11—71 மாலை 3-மணிக்கு எல்லா உறுப்பினர்களும் அடங்கிய அதிகாரச் சார்பற்ற கூட்டம் ஒன்று நடைபெறும்; அதில் தேர்ந்தெடுக்கப்படுபவர், 4-45 மணிக்கு நடைபெறும் கூட்டத்தில் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

பாழாக்கப்பட்ட மனித உழைப்பு நாட்கள்

1970-ஆம் ஆண்டில் 20கோடி

புதுடில்லி, நவ. 22—

"வேலைநிறுத்தம் --- கதவடைப்பு ஆகியவை காரணமாக, 1970-ஆம் ஆண்டில் இரண்டு கோடி மனித உழைப்பு நாட்கள் இழப்புக்கு ஆளாகியிருக்கின்றன"

என்று தொழிலாளர் அமைச்சர் ஆர். டி. காடில்கார் மக்களவையில் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"வேலைநிறுத்தங்களுக்கும், கதவடைப்புகளுக்கும் முக்கியக் காரணம், ஊதிய உயர்வுக் கோரிக்கை -- போனசுக் கோரிக்கை -- ஒழுங்கீனம் -- வன்முறைச் செயல்கள் ஆகியவை தொடர்பான தகராறுகளேயாகும்.

"1.35 கோடி மனித உழைப்பு நாட்கள், ஆயிரமும் அதற்கு மேற்பட்டும் தொழிலாளர்கள் பணியாற்றும் நிறுவனங்களிலேயே வீணாக்கப்பட்டிருக்கின்றன.

"இந்த இழப்பைக் கூடியவரை குறைப்பதற்கு மத்திய -- மாநில அரசுகளின் தொழிலாளர் தொடர்புத்துறை, பேச்சுவார்த்தை -- சமரச உடன்பாடு ஆகியவைகளின் மூலம் அதிகாரச் சார்பற்ற முறையில் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது.

"4,67,441 உழைப்பு நாட்கள் நிலக்கரிச் சுரங்கங்களிலும், 97,085 நாட்கள் பாங்கிகளிலும் -- மற்ற நிதி நிறுவனங்களிலும், 31,134 நாட்கள் இரயில்வேயிலும், 7,109 நாட்கள் விமானப் போக்குவரத்துத் துறையிலும் விரயமாக்கப்பட்டன."

47 நகராட்சிகட்கு எல். ஐ. சி. கடன்

சென்னை மாநகராட்சிக்கு ரூ. 5 கோடி கிடைக்கும்

சென்னை, நவ. 19—

தமிழ்நாட்டில் 47நகராட்சிகளுக்கு தண்ணீர் சப்ளை -- சாக்கடைத் திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 3.61 கோடிக்கு கடன் தொகைகளை ஆயுள் காப்பீட்டுக் கழகம் (எல். ஐ. சி.) அனுமதித்திருக்கிறது.

புதிய திட்டங்களுக்கும், நடைமுறையில் உள்ள சில திட்டங்களை நிறைவு செய்வதற்கும் இக்கடனுதவி கிடைக்கும்.

சென்னை மாநகராட்சிக்கு, வீராணம் குடிநீர் திட்டத்துக்காக ரூ 5 கோடி கடனை எல்.ஐ.சி. அனுமதித்திருக்கிறது; இக்கடன் தொகைகள் அனைத்தும் நடப்பு ஆண்டுக்கானவை; பணம் உடனடியாகத் தரப்படும்.

அரசுடைமை வங்கிகள்

தமிழ்நாட்டில் திறந்துள்ள புதிய கிளைகள்

புதுடில்லி, நவ. 20—

"தமிழ்நாட்டில் சென்ற ஆண்டு தேசியமயமாக்கப்பட்ட பாங்குகள் 117 கிளைகளைத் திறந்திருக்கின்றன; இவற்றில் 90 புதிய கிளை அலுவலகங்கள் கிராமப் புறங்களிலும், 17 சிறு நகர்ப் புறங்களிலும், 7 நகரங்களிலும், 3 தலைநகர -- துறைமுகப் பகுதிகளிலும் துவக்கப்பட்டன."

இத்தகவலை, மத்திய நிதியமைச்சர் ஒய். பி. சவாண், மாநிலங்கள் அவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில், 1971—72ஆம் ஆண்டில் மேலும் 90 புதிய கிளை அலுவலகங்கள் திறக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்றும், இவற்றில் 29 பாங்கு அலுவலகங்கள் சென்ற ஆகஸ்டு மாதம்வரை திறக்கப்பட்டன என்றும் கூறினார்.

கல்கத்தாவில் அமைச்சர் சத்தியவாணிமுத்து

எம். ஜி. ஆர். ரசிகர் மன்றச் சார்பில் சிறப்பான வரவேற்பு

அண்ணா தமிழ்ச் சங்க இலவசப் பள்ளியைப் பார்வையிட்டார்

கல்கத்தா, நவ. 20—

அந்தமான் செல்லும் வழியில் கல்கத்தாவிற்கு நவ. 14-ம் நாள் வருகைபுரிந்த தமிழக தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கட்கு, கல்கத்தா எம். ஜி. ஆர். ரசிகர் மன்றச் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

கல்கத்தா விமானநிலையத்தில் தமிழ்ச் சமுதாயத்தினர் பெருந்திரளாகத் திரண்டிருந்து மலர்மாலை அணிவித்து வரவேற்றனர்.

மத்திய கல்கத்தாவில் அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கம் நடத்தி வரும் 'அறிஞர் அண்ணா—நேதாஜி—முத்துராமலிங்கத் தேவர் தமிழ் இலவசப் பள்ளி'யை டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் பார்வையிட்டார்.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், தாம் அளித்த வாக்குறுதிப்படி பள்ளிக்கு நிதியுதவி அளிப்பார்கள் -- என்று சங்க நிர்வாகிகளிடம் அமைச்சர் கூறினார்.

பள்ளியின் பொருளாதாரச் சிரமங்களைத் தமிழக முதல்வரிடமும் -- கல்வியமைச்சரிடமும் எடுத்துக் கூறுவதாகவும் உறுதியளித்தார்.

மத்திய கல்கத்தாவில் உள்ள பட்டணி ஹாலில் அன்று மாலை 6-30 மணியளவில், கல்கத்தா எம். ஜி. ஆர். ரசிகர் மன்றச் சார்பில் பொது வரவேற்பு அளிக்கப்பட்டது.

மன்றத் தலைவர் திரு. நி. மாறன் வரவேற்புரையாற்றுகையில், மன்றத்தின் நோக்கங்களை விளக்கினார்.

இவ்வரவேற்பு விழாவுக்கு அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கத் தலைவர் திருப்பத்தூர் செ. வீரபத்திரன் தலைமைவகித்தார்.

'குழந்தைகள் தின'த்தையும் கொண்டாடும் வகையில் மன்றத்தார் ஏற்பாடு செய்திருந்தனர். இந்திய முன்னாள் தலைமையமைச்சர் நேருவின் திருவுருவப் படத்தையும் தமிழக முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தையும் திறந்து வைத்து, வரவேற்புக்கு ஏற்பாடு செய்திருந்த கல்கத்தா எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றத்திற்கு நன்றி தெரிவித்துத் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் சிறப்புரையாற்றினார்.

பர்மாவிலிருந்து வந்து கல்கத்தாவில் வாழும் ஏழைத் தமிழர்கள், தங்களுக்கு நிலம் — மனையிடம் — வியாபாரம் செய்யப் பணம் — வீடு கட்டப் பணம் ஆகிய வசதிகள் கிடைக்க ஆவனசெய்து உதவ வேண்டுமென்று அமைச்சரிடம் கேட்டுக் கொண்டனர்; ஆவன செய்வதாக உறுதி கூறினார் அமைச்சர்.

ஆயிரக்கணக்கான தமிழர்கள் கலந்துகொண்ட இந்த வரவேற்புக் கூட்டத்தில், கல்கத்தாவில் உள்ள தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு -- அமைச்சருக்கு மாலைகள் அணிவித்து -- அவரவர்கள் சார்ந்துள்ள அமைப்புகளைப் பற்றி எடுத்துரைத்தனர்.

மன்றப் பொதுச்செயலாளர் திரு. இ. ராமு நன்றியுரையாற்றினார்.

ஓராண்டில் கண்டுபிடிக்கப்பட்ட பதுக்கல் பணம்

மத்திய அமைச்சர் வெளியிடும் தகவல்

புதுடில்லி, நவ. 22—

"1970 அக்டோபர் முதல் 1971 செப்டம்பர் முடிய நடத்தப்பட்ட கறுப்புப் பண வேட்டையில், ரூ. 1,87,33,393 பிடிபட்டது"

என்று நாடாளுமன்றத்தில், துணையமைச்சர் கே. ஆர். கணேஷ் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"1971-ல் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்தச் சோதனைகள் நடத்தப்பட்டன; தமிழ்நாட்டிலும் மாராட்டிரத்திலும்தான் மிக அதிகமான கறுப்புப் பணம் சிக்கியது.

"தமிழ்நாட்டில் மட்டும் 92 சோதனைகளில், ரூ 32.84 இலட்சம் சிக்கியது.

"பம்பாயிலும் பூனாவிலும் நடத்தப்பட்ட 77 சோதனைகளில் ரூ. 31.82 இலட்சம் அகப்பட்டது.

"ரூ. 1 இலட்சத்திற்குமேல் பதுக்கிவைத்திருந்த தனிப்பட்டவர்களின் பட்டியலில், மாராட்டிரம், தமிழ்நாடு, பஞ்சாப், ஜம்மு -- காஷ்மீர் ஆகிய மாநிலங்கள் முன்னணியில் இருக்கின்றன."

குடும்ப நலத் திட்டம்

புதுவை மாநிலத்தின் சாதனை

பெங்களூர், நவ. 20—

புதுவை மாநிலத்தில் நடப்பு நிதியாண்டின் முதல் ஆறுமாத காலத்தில் 738 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது; 429 'லூப்'கள் பொருத்தப்பட்டன.

இதே காலத்தில், 33,000 நிரோத் சாதனங்களும் வழங்கப்பட்டன.

இந்த மாநிலத்தில் சென்ற செப்டம்பர் மாதத்தில் மட்டும் 120 ஆண்களுக்கும் -- 41 பெண்களுக்கும் சிகிச்சைகள் செய்யப்பட்டன; 76 'லூப்'கள் பொருத்தப்பட்டன.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் மக்களுக்கு உதவுவதில் நான்கு குடும்ப நலத் திட்ட நிலையங்களும் -- 40 மருத்துவமனைகளும் -- மருந்தகங்களும் பயன்பட்டன.

சைவர்களுக்கான இறைச்சி

தயிரிலிருந்து தயாரிப்பு

தயிரிலிருந்து இறைச்சியின் பண்புகள் உள்ள மிகு புரத உணவுப் பொருள் ஒன்றை அமெரிக்க வேளாண்மைத் துறை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்; நெடு நேரம் சூடுபடுத்தினாலும், இது உடைந்து துண்டாகிவிடுவதில்லை; பிடித்தமான மணம் -- காரம் முதலியன சேர்த்து உண்ணலாம்.

குறிப்பாக, வளர்ச்சிக் குறைவான நாடுகளில் கோடிக்கணக்கான மக்கள் பால் குடிப்பதில்லை; அவர்கள் இந்தப் புதிய தயிர்ப் பண்டத்தைத் துணை உணவாக உண்டு -- தம் உணவிலுள்ள ஊட்டச் சத்துக் குறைகளை நிறைவு செய்து கொள்ளக்கூடும்.

தயிரில் ஏராளமான (பால்) புரதச் சத்து உண்டு.

வாஷிங்டன் நகரிலுள்ள இரு இரசாயன வல்லுநர்கள் புதிய தயிர் உணவை உருவாக்கினார்கள்; ஏடு எடுத்த பாலுடன் 'கால்சியம் குளோரைடு' சேர்த்து -- தயிர் தயாரித்து -- பின்பு அதைச் சூடுபடுத்துகிறார்கள்; அடுத்துச் சிறு சிறு துண்டுகளாக அதை வெட்டிக் கொதிக்கும் எண்ணெயில் வறுக்கிறார்கள்; சற்றுப் பழுப்பு நிறம் வந்ததும் எடுத்துவிடலாம்.

வறுத்த தயிரைத் தண்ணீரில் போட்டு குளிர்ப் பெட்டியில் இரு வாரங்கள் வரையில் கெடாமல் வைத்திருக்கலாம்.

உரிய காப்புப் பொருள் சேர்த்து -- வீட்டு வெப்ப நிலையில், மூன்று மாதம் வரையில்கூடக் கெடாமல் வைத்திருக்கலாம்.

வறு தயிரைப் பயன்படுத்தி -- இறைச்சி மணமுள்ள குழம்பு தயாரித்து டப்பாக்களில் அடைத்து வைக்கலாம்.

கொரிப்புப் பண்டங்கள் செய்யலாம் -- இனிப்பும் பண்டங்களும் செய்யலாம்.

வறு தயிரை வாணிப முறையில் விற்பனை செய்யத் தொடங்குவதன் பொருட்டு, மேற்கொண்டும் ஆய்வுகள் செய்துவருகின்றனர்.

வருந்துகிறோம்

சென்னை 2-வது வட்டம் ம. பொ. சி. நகர் மக்கள் முன்னேற்ற மன்றத்தின் செயற்குழு உறுப்பினரும் கழகத் தொண்டருமான இரா. கிருட்டினசாமியின் மகன் கேசவன் —மன்ற உறுப்பினரும் கழக ஊழியருமான பக்கிரிசாமியின் மகள் தோகைநாயகி ஆகியோர் இயற்கையெய்தியது குறித்து வருந்துவதுடன் மேற்படி மன்றத்தின் சார்பில் அவர்கள்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

'மன்றம்' துணையாசிரியர் நாகை தர்மனின் சிறிய தந்தையாரும் -- நாகை நகர தி. மு. க. செயற்குழு உறுப்பினருமான வீ. பக்கிரிசாமி அவர்கள், 16—11—71 அன்று இயற்கையெய்தினார்; அன்று மாலை நடைபெற்ற சவ ஊர்வலத்தில் சட்டமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம், நகர தி. மு. க. செயலாளர் கல்யாணசுந்தரம், மற்றும் நகராட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டு இறுதி மரியாதை தெரிவித்தனர்.

சென்னை 27-வது வட்ட எம்.ஜி. ஆர். ரசிகர் மன்ற உறுப்பினர் எம். மதுரைமுத்துவின் தந்தையாரும் -- திராவிடர் கழகத்தில் தீவிரப் பணியாற்றியவரும் -- தி. மு. க. உறுப்பினருமான திரு. சி. முனுசாமி அவர்கள், 15-11-71 அன்று தமது 62-வது வயதில் இயற்கையெய்தினார்; மறுநாள் மாலை 6 மணிக்கு அவரது உடல் மூலக்கொத்தளம் இடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டது.

துரை. செல்வராசன் தலைமையில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் பே. தா. இன்மொழியன், கே. இராமலிங்கம், ர. வி. இராசன், சி. வேலாயுதம், அ. குப்புசாமி ஆகியோர் பேசினர்.

எல்லைப்பகுதியில் அந்நியப் பயணிகள்

கட்டுப்படுத்துவது பற்றி ஆய்வு

புதுடில்லி, நவ. 19—

"இந்தியா -- பாகிஸ்தான் எல்லையில் உசைனிவாலா காவல் சாவடியில் அந்நியப் பயணிகள் குவிவது அண்மைக் காலமாக அதிகரித்திருக்கிறது; இந்நிலவரத்தை அரசு பரிசீலித்து வருகிறது"

என்று பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம், நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

பூபேஷ் குப்தா (வ. கம்.) கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், "எல்லைப் பகுதிகளில் வெளிநாட்டு பயணிகள் நடமாட்டத்தின்மீது சில கட்டுப்பாடுகளை விதிக்கும் சாத்தியக் கூறுகளையும் அரசு ஆராய்ந்து வருகிறது" என்று குறிப்பிட்டார்.

கருத்தடை செய்து கொண்டோருக்கு பரிசு

500 பேருக்குக் கைத்தறி ஆடைகள் வழங்கப்பட்டன

காஞ்சிபுரம், நவ. 19—

செங்கல்பட்டு மாவட்டத்தில் கருத்தடைத் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதையொட்டிக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்குப் பரிசளிக்கும் விழா, வாலாசாபாத் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பரந்தூர் கிராம சுகாதார நிலையத்தில் நடந்தது.

அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட 500 பேருக்குக் கைத்தறி வேட்டியும் -- துண்டும் பரிசளிக்கப்பட்டன; அவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர் சீத்தாராம் தாஸ் வழங்கினார்.

இவை தவிர, ரூ. 30 ரொக்கப் பரிசும், பரிசுச் சீட்டு—ஓராண்டு இலவச மருத்துவ வசதிக்கான அனுமதிச் சீட்டு ஆகியவையும் வழங்கப்பட்டன.

மருத்துவ நிலைய டாக்டர்கள் ஜி. வெங்கடேசன், எம். தங்கவேலு ஆகியோர், அறுவைச் சிகிச்சை முறைகளை விளக்கினர்.

பால் பெருக்குத் திட்டம்

தமிழ்நாட்டிற்கு ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாக தகவல்

மூன்றாண்டுக்குள் திட்டம் நிறைவேற்றப்படும்

ஹோசூர், நவ. 22—

சென்னை நகரில் பால் விநியோகத்தைப் பெருக்குவதற்காக இந்தியப் பால் பண்ணைக் கார்ப்பரேஷன், தமிழ்நாடு அரசுக்கு ரூ. 10 கோடி ஒதுக்கியிருக்கிறது; இது, திட்டச் செலவுகளுக்கும் புறம்பாக ஒதுக்கப்படுகிறது.

இந்தக் கார்ப்பரேஷனின் தலைவர் டாக்டர் வி. குரியன், இத்தகவலை ஒசூரில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

ஒசூரில் திட்ட அமைச்சர் சுப்பிரமணியமும் -- தமிழக அமைச்சர் க. இராசாராமும், தமிழ்நாட்டில் பால் பண்ணை வளர்ச்சி குறித்து டாக்டர் குரியனுடன் விவாதித்தனர்.

இந்தியப் பால் பண்ணை கார்ப்பரேஷன் ஒதுக்கியுள்ள ரூ. 10 கோடியைப் பயன்படுத்த ஒரு திறமையான அமைப்பை உருவாக்குவது பற்றித் தாங்கள் விவாதித்ததாகவும், எந்தப் பகுதியில் செலவிடுவது என்பது தமிழக அரசு முடிவு செய்யவேண்டியதாகும் என்றும் டாக்டர் குரியன் நிருபர்களிடம் கூறினார்; மூன்றரை ஆண்டுகளில் இந்தத் தொகையை செலவிட்டாக வேண்டும்' என்றும் அவர் சொன்னார்.

ஒசூர் கால்நடைப் பண்ணையின் வளர்ச்சிக்காகக் கூடுதல் மானியம் அளிக்கும் வாய்ப்புப் பற்றியும் தாங்கள் விவாதித்ததாக அவர் சொன்னார்.

"தமிழ்நாட்டில் பால் உற்பத்தியைப் பெருக்க பிரிட்டிஷ் அரசு எந்த வகையில் உதவ முடியும் என்பதைக் கண்டறிவதற்காகப் பிரிட்டனிலிருந்து அடுத்த சில மாதங்களில் தொழில் நுட்ப நிபுணர் குழு ஒன்று வரும்" என்றும் அவர் சொன்னார்.

திறப்பு விழாக்கள்

சூலகிரியில் திட்ட அமைச்சர் சுப்பிரமணியம், ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்கான குடியிருப்புகளைத் திறந்துவைத்தார்.

அமைச்சர் க. இராசாராம், வேளாண்மை கிடங்கு ஒன்றைத் திறந்து வைத்தார்.

கலெக்டர் பத்மநாபன் குடிநீர் மேல்தொட்டி ஒன்றைத் திறந்து வைத்தார்.

தருமபுரி மாவட்ட விவசாய வளர்ச்சிக்கு நவீன முறைகளைக் கையாளும் சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வு நடத்துவதற்காகத் தம்முடன் விவசாய நிபுணர்களை அழைத்து வந்திருப்பதாக சி. சுப்பிரமணியம் கூறினார்.

"இந்த மாவட்டத்தில் பல நவீன தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படக்கூடும்; 10 ஆண்டுக்காலத்தில் இந்த மாவட்டம் தமிழ்நாட்டிலேயே தொழில்துறையில் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கப் போகிறது."

வெளி நாடுகளில் பணியாற்றும் இந்திய ஊழியர்கள்

புதுடில்லி, நவ. 22—

வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களில் மொத்தம் 746 ஊழியர்களும், தூதரகமல்லாத அலுவலகங்களில் 1547 பேரும் பணியாற்றுகின்றனராம்.

வெளிநாடுகளைச் சேர்ந்த தூதரகங்களில் 718 பேரும், தூதரகமல்லாத அலுவலகங்களில் 1,608 பேரும் பணியாற்றுகின்றனர்.

இத்தகவல் நாடாளுமன்றத்தில் தரப்பட்டது.

தமிழகத் திட்டக் குழு

துறைவாரியாகத் துணைக் குழுக்கள் அமைப்பு

சென்னை, நவ. 20—

தமிழகத் திட்டக் குழுவில், தனித்தனியாக 15 உட்குழுக்கள் புதிதாக ஏற்படுத்த அரசு அனுமதியளித்திருக்கிறது.

இவைகளுக்குத் தனித்தனியாக செயலாளர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தத் தனிக் குழுக்களின் பதவி காலம் அதிகபட்சம் 6 மாதமோ அல்லது வேலை முடியும் வரையோ இருக்கும்.

கல்வி -- விஞ்ஞான பணிக் குழுச் செயலாளராக கே. வெங்கடசுப்பிரமணியம் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சுகாதாரம் --சத்துணவுப் பணிக் குழுச் செயலாளராக ஓய்வு பெற்ற டாக்டர் கே. பி. சாரதியும், காட்டு வளத்துக்கு வி. எம். நரசிம்மனும், வேளாண்மைக்கு சே. நரசிம்மலுவும், கால்நடை வளர்ச்சிக்கு ஓய்வு பெற்ற டாக்டர் அனந்தபத்மநாபனும், மீன் வளத்துக்கு டி. சுந்தரராசனும், போக்குவரத்துக்கு ஓய்வு பெற்ற எஸ். ஐ. வர்மாவும், எரிபொருள்--மற்றும் சக்திகளுக்காக எல். கே. நாராயணசாமியும், கனி வளத்துக்குப் பேராசிரியர் சரவணனும், சிறு தொழிலுக்கு ஆர். முத்துக்கிருஷ்ணனும், மனித சக்தி -- பொருளாதார வளர்ச்சி சமூக மாற்றம் பிரிவுக்கு பி. சுப்பிரமணியனும், கிராம வளர்ச்சி -- கிராம வீட்டு வசதிகளுக்காக ஆர். கோவிந்தசாமியும் செயலாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆயுள் காப்பீட்டுக் கழகம்

அக்டோபர் மாதச் சாதனை

புதுடில்லி, நவ. 20—

ஆயுள் காப்பீட்டுக் கழகம் சென்ற அக்டோபர் மாதம் பாலிசி விற்பனையையும் சேர்த்து சுமார் ரூ. 105.84 கோடிக்குத் தொழில் செய்திருக்கிறது; வெளிநாட்டு வியாபாரத்தால் கிடைத்த ரூ 69 இலட்சமும் இதில் சேர்ந்ததாகும்.

நடப்பு நிதியாண்டின் முதல் ஏழு மாதங்களில் ரூ. 605.85 கோடிக்குத் தொழில் செய்துள்ளது; சென்ற ஆண்டு இதே காலத்தில் அது ரூ. 439.22 கோடிக்குத் தொழில் நடத்தியது.

மருத்துவமனையிலேயே மருந்துகள் தயாரிப்பு

அமைச்சர் க. அன்பழகன் யோசனை

மருந்து தயாரிப்புத் தொழில் பயிலும் மாணவர்களுக்கு நல்ல எதிர்காலம்

சென்னை, நவ. 22—

"300 படுக்கைகளும் -- அதற்கு மேலும் உள்ள மருத்துவமனைகள், தங்களுக்குத் தேவையான பொது மருந்துகளைத் தாங்களே தயார் செய்து கொள்ள முயல வேண்டும் என அரசு எண்ணுகிறது"

என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் இங்கு தெரிவித்தார்.

சென்னை மருத்துவக் கல்லூரியின் மருந்துத் தயாரிப்பு மாணவர்கள் நடத்திய 10-வது தேசிய மருந்து வாரத்தில் கலந்துகொண்டு அமைச்சர் பேசினார்.

அப்போது அவர், 'மருந்துத் தயாரிப்பில் ஈடுபட்டிருப்பவர்கட்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது' என்று தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"மருத்துவமனைகள் தங்களுக்குத் தேவையான மருந்துகளைத் தாங்களே தயாரிக்க முற்பட்டால் மருந்துத் தயாரிப்பு மாணவர்களுக்கு மேலும் வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

"சென்னையிலும் -- தூத்துக்குடியிலும் இரசாயனத் தொழிற்சாலைகள் உருவாகி வருவதால் அடுத்த ஐந்தாண்டுகளில் மருந்துத் தயாரிப்பு ஊழியர்களின் வேலைவாய்ப்பு நான்கு மடங்கு பெருகக்கூடும்.

"தனக்கு வேண்டிய மருந்தைத் தானே தயாரித்துக்கொள்ளும்படிச் சென்னைப் பொது மருத்துவமனைக்கு ஏற்கனவே அரசு உத்தரவிட்டிருக்கிறது."

காலத்தின் தீர்ப்புக் கண்டு ஆவேசம் வேண்டாம்

நியாயத்தின் தீர்ப்பை எதிர்க்கக் கூட்டணியா?

மேற்கு வங்கம் அல்ல தமிழகம் -- தொழிற் சங்க அரசியல் பிழைப்பு நடத்தும் குழப்பவாதிகட்கு கி. மனேகரன் அறிவுரை

சென்னை, நவ. 22—

"இங்கே தொழிற் சங்கத்தை நம்பிச் சிலர் அரசியல் நடத்துகிறார்கள்; அவர்களின் நோக்கமே, 'தொழிற்சாலைகளின் சக்கரம் நிற்க வேண்டும் -- தொழிலாளர்கள் மோதிக்கொள்ள வேண்டும் -- அவர்கள் கொட்டும் குருதியைக் குடிக்க வேண்டும் -- அதன் மூலம் தொழில் அமைதியைக் குலைக்க வேண்டும்' என்பதுதான்!

"எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும், 'தொழிலாளர்கள் வாழ்வு உயர்த்தப்பட வேண்டும்' என்று நோக்கமாக இருக்க வேண்டும்.

"'எப்படியாவது குழப்பம் விளைவித்தே தீர வேண்டும்' என எண்ணிச் செயல்படுபவர்கள், 'வாளேடுப்பவன் வாளாலேயே அழிவான்' என்பதை மறந்துவிடக்கூடாது!

"தி.மு. கழகம், தொழிலாளர்களை நம்பியிருக்கும் கட்சி; கழக ஆட்சியை காலத்தில் அழிக்கக் கருதினால் அவர்கள் மூளைகள் பழுது பார்க்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகித்தான் தீரும்.

"தொழிற்சங்கத் துறையிலேயே சிக்கல்களைப் பேசித் தீர்க்கின்ற தத்துவத்தை உருவாக்கிய ஒரே கட்சி தி.மு. கழகம்தான்; அந்தத் தத்துவத்தைத் தந்த தானைத் தலைவர் பேரறிஞர் அவர்களாவார்.

"தமிழகத்தை, 'மேற்கு வங்கமாக ஆக்க வேண்டும்' எனச் சில தலைவர்கள் கருதுகிறார்கள்; தமிழகம் மேற்கு வங்கமாக ஆகாது-- ஒருபோதும் அப்படி மாறாது!

"இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் ஒத்துழைந்தால், மேற்கு வங்காளத்தைத் தமிழகமாக மாற்ற முடியும்.

"இங்கே இருக்கின்ற சில தொழிற்சங்கத் தலைவர்களுக்கு, இருந்ததை இழந்துவிட்ட எரிச்சல்! 'அனுபவித்த வாழ்க்கையைப் பறித்துவிட்டார்கள்' என்ற வயிற்றெரிச்சல்!

"தி.மு. கழகத்தினர், எதையுமே சிரமப்பட்டுத்தான் பிடிப்பார்கள்; பிடித்தவற்றைச் சுலபத்தில் விட்டுவிட மாட்டார்கள்; அதற்கு எடுத்துக்காட்டுத்தான் சென்னை மாநகராட்சி!

"'தொழிலாளத் தோழர்கள், எந்தக் காரணத்தைக் கொண்டும் வன்முறையில் ஈடுபடக்கூடாது; கடமைகளைச் செய்ய வேண்டும்; தொழிலாளர்கள் கடமைகளைச் செய்து உரிமைகளைக் கேட்கும்போது முதலாளிகள் மனக்கூச்சமின்றித் தாராளமாக உதவ முன்வர வேண்டும்; தொழிலாளர்கள் உழைப்பை--நேரத்தை வீணாக்கக்கூடாது' என்பதுதான் தி.மு. கழகம் கருதுகிறது.

"நாற்றுக்கு நாற்று அமைதி வேண்டும்; தமிழ்நாட்டில்தான் அமைதி நிலவுகிறது' என்ற அந்தப் பெருமையைக் காக்க வேண்டும்"

என்று தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைத் தலைவரும்-நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள், தெள்ளத்தெளிவுற விளக்கிக் கூறினார்.

பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்கள் சார்பில் பெரம்பூர் பாரக்ஸ் மணிக்கூண்டு அருகில் நடந்த சிம்சன் பிரச்சினை விளக்கப் பொதுக்கூட்டத்திலேயே திரு. மனோகரன் இவ்விதம் கூறினார்.

தோழர் டி. வி. கண்ணன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பெஸ்ட் அண்டு கம்பெனி சோ. கணேசன், மதுரை, வி. காசி, த. ல. கோவிந்தசாமி, சி. திருமாவளவன், இராசன், இரா. கணபதி, டி. நடராசன் எம்.சி., மா. வே. நாராயணசாமி, குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., முரசொலி அடியார், வி. எஸ். கோவிந்தராசன், காட்டூர் கோபால் ஆகியோர் பேசியபின், திரு. மனோகரன் பேசினார்; அவர் மேலும் பேசியதாவது:—

"முன்னேற்றச் சங்கப் பேரவை மாளிகைமீது எதிர் முகாமைச் சேர்ந்தவர்கள் ஆவேசக் குண்டுகளை வீசி வருகிறார்கள்; இந்த ஆவேசத்தின் நோக்கம்தான் என்ன?

தி.மு. கழகத்தை அணுகியவர்கள் வென்றார்கள்---அழுததியவர்கள் செத்தார்கள்!

மக்கள் மத்தியில் பிடிப்புள்ள கட்சிதான் வாழும்; அந்தப் பிடிப்பு அறுபடுமானால், எந்தக் கட்சியானாலும் முகவரி தெரியாமல்தான் போய்விடும்!

கொடி கட்டி ஆண்டவர்களெல்லாம் இன்று வீழ்ந்து கிடக்கிறார்கள்—அவர்களின் வேதனை நமக்குப் புரிகிறது!

ஒழுங்காக--நிலையாக மக்களிடம் தொடர்பு கொண்டிருந்தால் இந்தப் பரிதாப நிலை சிண்டிகேட் பெருந் தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்காது!

சிம்சன் பிரச்னை பற்றி இப்போது பரவலாகப் பேசப்படுகிறது; 'சிம்சன் சங்கத்தைப் பிடித்தோம்--காட்டூர் கோபால் தலைவரானார் என்பதல்ல பிரச்சினை; 'தி. மு. கழகம் இங்கே வெற்றி பெற்றிருக்கிறது' என்பதும் பிரச்சினையல்ல!

இன்று குறிப்பிட்ட சில கட்சிக்காரர்கள், தொழிற் சங்கங்களை நம்பியே தங்கள் அரசியலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை நிலையாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை,

"தொழிலாளர் வயிற்றில் அடிக்காதீர்கள்; ஏனென்றால், 'தொழிலாளர் அரங்கு மட்டும் என்றைக்குமே பிளவுபடக்கூடாது' என்று தி. மு. கழகம் கருதுகிறது; தொழிற் சங்கத்தினர் அரசியல் கட்சிகளை நம்பினாலும், அரசியல் கட்சிகள் தொழிற்சங்கத்தையே நம்பியிருக்கக்கூடாது தொழிற்சங்கம் கொடி அரசி அரசியல் மரத்தில் தாவிப் படரலாம்; ஆனால் தொழிற் சங்கக் கொடியிலே அரசியல் மரம் தாவினால் கொடியே செத்துப்போகும்"

என்று குறிப்பிட்டு, தொழிலாளர்களிடையே பிளவு ஏற்படக் கூடாது' என்றும் வலியுறுத்தினார்.

உடனே, 'தி. மு. கழகத்திற்குத் தொழிற் சங்கத் துறையில் திறமையில்லை; அதனால்தான் ஒதுங்குகிறார்கள் -- ஓடுகிறார்கள்; இவர்கள் கற்றுக்குட்டிகள்' என்றெல்லாம் பேசினார்கள்.

இப்படிப் பேசியவுடன், 'எனக்கா தெரியாது' என்று சொல்லி கச்சை வரிந்துகட்டிக்கொண்டு வந்துவிடவில்லை' அண்ணா!

தி. மு. க. சார்பில் தொழிற் சங்கம் அமைப்பது பற்றி அண்ணா அவர்களை எவ்வளவோ கேட்டுப் பார்த்தோம்; அவர் மறுத்துவிட்டார்; -- 'நீங்கள் தொழிற் சங்கத்தை அமைப்பதில் ஆவேசப்பட வேண்டாம் -- ஆத்திரப் பட வேண்டாம்' என்றும் தெரிவித்தார்.

மெத்தச் சிரமப்பட்டு அண்ணா அவர்களை ஒப்புக்கொள்ள வைத்தோம்; 'ஆரம்பியுங்கள்' என்றார்.

தொழிற்சங்க இயக்கத்தை ஆரம்பித்தோம்; இன்று சிம்சனை வழி நடத்துகின்ற அளவுக்கு நமது நிலை வளர்ந்திருக்கிறது.

தொழிலாளர்களை ஆட்டக் காய்களாகப் பயன்படுத்தி அவர்களின் வாழ்வை கபளீகரம் செய்தவர்கள் முன்பிருந்தவர்கள!

போகவேண்டியவர்கள் போவார்கள் -- வர வேண்டியவர்கள் வந்தே தீருவார்கள்!

'குருமூர்த்தி -- சிம்சனை விட்டுப் போக வேண்டும்' என்பது காலத்தின் தீர்ப்பு -- 'காட்டூர் கோபால் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும்' என்பது நியாயத்தின் முடிவு!

இருந்ததையெல்லாம் இழந்தவர் குருமூர்த்தி; அவரின் ஆவேசத்திற்குக் காரணம் நமக்குப் புரிகிறது!

நம்மை எதிர்த்துத் தொழிற் சங்கத் துறையில் சிலர் கூட்டணி அமைத்திருக்கிறார்கள்; அந்தக் கூட்டணிக்கு பின்னாலே இருக்கின்ற தத்துவமென்ன?

இந்தியத் துணைக் கண்டத்திலேயே அமைதியாக ஆட்சி நடக்கின்ற ஒரே மாநிலம் -- தொழிலாளர் நலனை அக்கறையோடு பாதுகாக்கும் அரசு -- பிச்சைக்காரர்களுக்கு நல்வாழ்வுத் தரும் அரசு -- தி. மு. கழகத்தைத் தவிர வேறு இல்லை!"

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (26, [illegible] ரோடு, சென்னை-10) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.

காங்கிரசுத் தலைமையகத்தில் நடந்தது என்ன?

மிகைப்படுத்தப்படுவதாக இந்திரா விளக்கம்

அகமதாபாத், நவ. 22—

டில்லியிலுள்ள காங்கிரசுத் தலைமையகத்தைப் பலாத்காரமாகக் கைப்பற்றுவதைத் தாம் ஆதரிக்கவில்லையென்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி தெரிவித்தார்.

ஆனால் அண்மையில் டில்லியில் நடைபெற்றதாகக் கூறப்படுவது பலாத்கார நடவடிக்கையல்ல என்றும், ஏனெனில், காங்கிரசுத் தலைவர்கள் அங்குள்ள ஊழியர்கள் அழைத்ததன் பேரிலேயே சென்றிருக்கின்றனர் என்றும், அது பலாத்கார நடவடிக்கையல்ல என்றும் கூறினார்.

மேலும், சில சுயநலக்காரர்கள் இநிகழ்ச்சியை மிகைப்படுத்தி அதிக அளவுக்கு விளம்பரப்படுத்துகின்றனர் என்றும் தலைமையமைச்சர் தெரிவித்தார்.

திபேத்தில் செஞ்சீனாவின் ராடார் நிலையங்கள்

பாதுகாப்பு அமைச்சர் தகவல்

புதுடில்லி, நவ. 22—

"வெகு தூரத்தில்வரும் கப்பல்கள், விமானங்களைக் கண்டறிவதற்கான சாதனங்களுள்ள ராடார் நிலையங்களை திபேத்தில் சீனா ஏற்படுத்தியிருக்கிறது"

என்று மக்களவையில், பாதுகாப்பு அமைச்சர் ஜெ ஜீவன்ராம் கூறினார்; ஆனால், பொதுநலனைக் கருதி. மேற்கொண்டு தகவல்களைத் தர அவர் மறுத்துவிட்டார்.

"திபேத்தில் ஏவுகணைகளைச் சோதித்துப் பார்க்கும் நிலையங்கள் இருக்கின்றனவா என்பது பற்றித் தகவல் எதுவும் இல்லை"

என்று ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில கூறினார்; 'எல்லைக்கு அப்பால் நடக்கும் சம்பவங்களைக் கருத்தில்கொண்டு நம்முடைய பாதுகாப்புத் திட்டங்களை வகுக்கிறோம்' என்று தெரிவித்தார்.

ஆந்திரத்தில் புதிய வரிகள்

அனந்தப்பூர், நவ. 22—

"வங்க தேச அகதிகள் நிவாரணத்திற்காக இன்னும் சில நாட்களில் ஆந்திர மாநில அரசு புதிய வரிகளை விதிக்கவிருக்கிறது"

என்று, முதலமைச்சர் பி. வி. நரசிங்க ராவ் இங்கு அறிவித்தார்.

கொலைகள் அதிகரிக்கின்றன!

புதுடில்லி, நவ. 22—

கடந்த ஐந்தாண்டுக் காலத்தை விடத் தற்போது இந்தியாவில் ஐந்து சதவிகிதம் அதிகரித்திருக்கின்றன; தற்போது நாள்தோறும் 43 கொலைகள் நடைபெறுகின்றன.

1965-ம் ஆண்டில் 12,310 கொலைகள் நடந்தன; அதை அடுத்த ஆண்டுகளில் முறையே 12,631—13,398—13,849—14,732 கொலைகள் நடந்தன.

1970-ம் ஆண்டில் 15,536 கொலைகள் நடந்தன.

தொழிலாளர் பணத்தை முடக்கி வைத்திருக்கும் நிறுவனங்கள்

ரூ.17.10 கோடிவரை நிலுவை

புதுடில்லி, நவ. 22—

"தொழிலாளர் வைப்பு நிதி (பிராவிடண்டு பண்டு)க்குச் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்தத் தவறிய நிறுவனங்களிடம் நிலுவையாக இருக்கும் தொகை ரூ. 17.10 கோடியை எட்டியிருக்கிறது"

என்று, நாடாளுமன்றத்தில் தகவல் தரப்பட்டது.

இஸ்ரேலுடன் போர் தொடுக்க முடிவு

எகிப்து அதிபர் சதாத் அறிவிப்பு

கெய்ரோ, நவ. 22—

"திமிர் பிடித்த இஸ்ரேலுடன் போர் புரிவதைத் தவிர எங்களுக்கு வேறு மாற்று வழியில்லை"

என்று, எகிப்து குடியரசுத் தலைவர் அன்வர் சதாத் அறிவித்திருக்கிறார்.

கடந்த இரண்டு நாட்களாக சூயஸ் கால்வாய்ப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினருடன் தங்கியிருந்து பேசுகையில் அவர் இப்படிக் கூறியிருக்கிறார்.

தமது இந்தக் கடைசி முடிவைத் தாம் அமெரிக்காவுக்குத் தெரியப்படுத்திவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தடை செய்யப்பட்ட இடங்கள்

தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, நவ. 20—

அரசாங்க இரகசியங்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சென்னை நகரிலும் -- மற்றும் 7 மாவட்டங்களிலுமுள்ள 'இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்' நிறுவனத்தின் அமைப்புகளையும், 'டிப்போ'க்களையும் தடை செய்யப்பட்ட இடங்களாகத் தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கிறது; நவ. 18-ம் நாள் முதல் இது நடைமுறைக்கு வந்திருக்கிறது.

புதிய நியமனம்

தமிழகஅரசு உத்தரவு

அரசு அலுவலகங்களில் காலியாக உள்ள இடங்களில் இன்னும் 6 மாத காலத்திற்கு வேறு நபர்களை அமர்த்தக்கூடாது -- என்று இம்மாதம் 3-ந் தேதியன்று தமிழக அரசு ஓர் உத்தரவு பிறப்பித்திருந்தது; இப்போது இந்த உத்தரவில் ஒரு மாற்றத்தை அரசு அறிவித்துள்ளது.

இதன்படி, '3—11—71-ந் தேதி நிலவரப்படி 3 மாதத்திற்கும் மேலாகக் காலியாக உள்ள இடங்களில் 31—3—72 வரை வேறு யாரையும் அமர்த்தக் கூடாது' என்று அந்த உத்தரவு கூறுகிறது.